நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தென்காசி
முன்னிலை, திருமதி.S.முத்து லெட்சுமி, பி.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர், தென்காசி
2026 ம் வருடம் மார்ச் திங்கள் 6–ம் நாள் வெள்ளிக்கிழமை
குற்றப்பலவகை மனு எண்.975/2025
CNR.No.TNTS02-005471-2025
IN
சி.சி.எண்.371/2025
IN
குற்ற எண். 494/2024

மசூது,
த/பெ. முகம்மது மீரான்,
145, ஹரிகர விநாயகர் கோவில் தெரு,
தென்காசி. ... மனுதாரர்/வாகன உரிமையாளர்

/எதிர்/

காவல் ஆய்வாளர்,
தென்காசி காவல் நிலையம். ... எதிர்மனுதாரர்/வாதி

/எதிர்/

இப்ராஹிம் ... எதிரி

இம்மனுவானது இன்று விசாரணைக்காக வரப்பெற்று மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.குட்டித்துரை அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/முறையீட்டாளருக்காக அரசு உதவி வழக்கறிஞர் நிலை 2 தென்காசி அவர்கள் ஆஜராகியும் வரப்பெற்ற இம்மனுவில் இரு தரப்பையும் கேட்டு ஆவணங்கள் அனைத்தையும் பார்வையிட்டு பரிசீலனை செய்த பின்னர் இன்று இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும் பின்வரும் ....

**<u>உத்தரவு</u>**

1. **<u>மனுவின் சுருக்கம்</u>** –

மனுதாரர் மனுதாரர்/வாகன உரிமையாளர் ஆவார். மேலும், TN76BA6134 என்ற பதிவெண் கொண்ட TVS Rider Bike என்ற இரு சக்கர வாகனத்தின் உரிமையாளர் ஆவார் என்றும், மேற்படி வாகனம் மீது தென்காசி காவல் நிலைய குற்ற எண்.494/2024–ன் 281, 125(ஏ) BNS–ன் கீழ் மனுதாரரின் மகன் இப்ராஹிம் என்பவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி வாகனத்தினை தனது மைனர் மகனாகிய இப்ராஹிம் தான் ஓட்ட கொடுத்ததாக கூறி வழக்கு பதிவு செய்யப்பட்டு, Junile Justice Board–ல் தனது மகன் மீது ஒரு குற்ற அறிக்கையும், தனது மைனர் மகனுக்கு தான் இரு சக்கர வாகனத்தை ஓட்டக்கொடுத்ததாக மனுதாரர் மீது ஒரு குற்ற

அறிக்கையும் பொய்யாக தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மேலும், மேற்படி TN 76 BA 6134 என்ற பதிவெண் கொண்ட TVS Rider Bike இருசக்கர வாகனத்தை வட்டார போக்குவரத்து ஆய்வாளர் அவர்களிடம் மோட்டார் வாகன ஆய்வுக்காக ஒப்படைக்கப்பட்டு பின்பு மேற்படி இருசக்கர வாகனம் தற்போது வாதி போலீசார் பாதுகாப்பிலிருந்து வருகிறது என்றும், மேற்படி வாகனம் காவல்நிலைய பாதுகாப்பில் திறந்த வெளியில் மழை, வெயில் மற்றும் இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்பட்டு அதில் இயந்திர கோளாறு ஏற்பட்டு அந்த வாகனத்தை தொடர்ந்து இயக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும், மேற்படி வாகனத்தின் மதிப்பு ரூ.50,000/- மதிப்பு என்றும், மேலும் தனது இருசக்கர வாகனத்தை வழக்கு முடியும் வரை எந்தவித உருமாற்றம் செய்யவோ, விற்கவோமாட்டார் எனவும், மேற்படி வாகனத்தை மனுதாரர் வசம் தற்காலிகமாக ஒப்படைக்க கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2. அரசு தரப்பு பதிலின் சுருக்கம்</u> –**

அரசு தரப்பில், வழக்கில் விபத்துக்குள்ளான வாகனம் கைப்பற்றப்பட்டு மோட்டார் வாகன ஆய்வாளர் தென்காசி அவர்களிடம் ஆய்வுக்கு உட்படுத்தி பின்னர் மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களின் உத்தரவின் பேரில் இளஞ்சிறாருக்கு மனுதாரர் எதிரி வாகனத்தை ஓட்ட கொடுத்த காரணத்தால் மனுதாரருக்கு வாகனத்தை கொடுக்க இயலாது என்று கூறி தென்காசி காவல் நிலைய பொறுப்பில் வைக்க பெற்றுக்கொண்டதாகவும், மேலும் எதிரிக்கு வாகனத்தை கொடுத்தால் நீதிமன்ற விசாரணைக்கு ஆஜர்படுத்தமாட்டார் என்றும், எனவே, மனுதாரர் வசம் மேற்படி வாகனத்தை ஒப்படைக்க ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>3. தீர்வு</u> –**

வழக்கு ஆவணங்களைப் பரிசீலிக்கும் போது, இந்த வழக்கானது மனுதாரரின் மீது பிரிவுகள் 281, 106 BNS and 4, 181(4), 129, 199A MV Act ன் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு வழக்கானது சிசி.எண்.371/2025 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது. மேலும், மனுதாரர் சொல்லும் வாகனமான TN 76 BA 6134 என்ற பதிவெண் கொண்ட TVS Rider Bike இருசக்கர வாகனம் எதுவும் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படாத நிலையிலும், அரசு தரப்பில் வழக்கில் விபத்துக்குள்ளான வாகனம் கைப்பற்றப்பட்டு மோட்டார் வாகன ஆய்வாளர் தென்காசி

அவர்களிடம் ஆய்வுக்கு உட்படுத்தி பின்னர் மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களின் உத்தரவின் பேரில் இளஞ்சிறாருக்கு மனுதாரர் எதிரி வாகனத்தை ஓட்ட கொடுத்த காரணத்தால் மனுதாராருக்கு வாகனத்தை கொடுக்க இயலாது என்று கூறி தென்காசி காவல் நிலைய பொறுப்பில் வைக்க பெற்றுக்கொண்டதாகவும் ஆட்சேபனையில் தெரிவிக்கப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும், மேலும் இந்த வழக்கில் TN 76 BA 6134 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையிலும், மேற்படி வாகனமானது இந்த வழக்கில் வழக்கு சொத்தாக குறியிட வேண்டிய அவசியம் இல்லை என்பதை கருத்தில் கொண்டும், மனுவின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில் கொண்டும், நீதியின் நலனை கருத்தில் கொண்டும் மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்வதென்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

முடிவாக, இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு, பின்னர் 2025ம் வருடம் மார்ச் திங்கள் 6-ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

S MUTHU LAKSHMI

Digitally signed by S MUTHU LAKSHMI
Date: 2026.03.06 18:57:00 +0530

நீதித்துறை நடுவர்,
தென்காசி.